பக்கங்கள்:-22

# காலை முரசு

முழுக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 08 | புதன்கிழமை | 23.08.2023 | அதிர்வு 22

## நேற்றும் ஒருவர் சுட்டுக்கொலை!

பதுளை, அப்புத்தளை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கொழும்பு – அப்புத்தளை பிரதான பகுதியில் உள்ள ஹோட்டலுக்குள் 04▶

# முல்லை. நீதிபதி மனநோயாளியாம்! சரத் வீரசேகரா எம்.பி. கண்டுபிடிப்பு

## நாடாளுமன்றத்தில் அவர் சண்டப்பிரசண்டம்



கொழும்பு, ஓகஸ்ட் 23

“முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ஒரு மனநோயாளி. இவர் பௌத்தர்களுக்கு இடமளிக்கமாட்டார். ஆனால், தமிழர்கள் பொங்கல் பொங்குவதற்கு இடமளிப்பார். மனநோயாளியான நீதிபதியால் சரியான தீர்மானத்தை எடுக்க முடியாது. ஆகவே, முல்லைத்தீவு நீதிமன்றத்துக்குப் பிறிதொரு நீதிபதி ஒருவரை நியமிக்குமாறு நீதி அமைச்சரிடமும், நீதிச் சேவை ஆணைக்குழுவிடமும் வலியுறுத்துகின்றேன்.”

– இவ்வாறு முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் 05▶

# சமூகப் பிரதிநிதிகளின் குழுவை தடுத்து வைத்து அடாவடித்தனம்

## மயிலதமடுவுக்குச் சென்ற 18 பேரை மிரட்டி பேரினவாதிகள் கும்பல் பெரும் அட்டகாசம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு, ஓகஸ்ட் 23

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு மாதவனைப் பிரதேசத்திலுள்ள பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும், 05▶



# மயிலத்தமடு அடாவடி குறித்து உடனே சபையில் குரல் எழுப்பிய கஜேந்திரன்!

கொழும்பு, ஓக .23

மட்டக்களப்பு, மயிலத்தமடு சம்பவத்துக்கு எதிராகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் சபையில் நேற்று கருத்து தெரிவித்தார்.

மயிலத்தமடு பிரதேசத்தை நேற்று பார்வையிடச் சென்ற பல்சமய மதத் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களைப் பௌத்த தேரர் கொண்ட குழுவினர் தடுத்துவைத்திருந்தபோதே அவர் தனது எதிர்ப்பைச் சபையில் வெளிப்படுத்தி அவர்களை 05▶




# குருந்தூர்மலைக்கு பௌத்த மதத்தவர் தனித்து உரிமை கொண்டாட முடியாது

### வடக்கு – கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் திட்டவட்டம்

குருந்தூர் மலை தொல்பொருள் திணைக் களத்திற்கானது அதனை பௌத்த சமயத்தவர் மட்டும் உரிமை கொண்டாட முடியாது. வட, கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் 02▶



## இ ப ரகசியம்



இலங்கை ஒரு விசித்திரமான நாடு. இங்கு எது நடக்க வேண்டுமோ, நடைபெற வேண்டுமென்று பேசப்படுகின்றதோ, எது அவசியமோ,அது நடக்காது. அதற்குத் தலைகீழான விடயங்கள் தான் நடக்கும்.

நல்லிணக்கம், 04▶

# சரத் வீரசேகரதான் இங்கு ஓர் அரசியல் மனநோயாளி

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. பதிலடி




"முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியை மனநோயாளி என்று கூறும் சரத் வீரசேகரதான் ஓர் அரசியல் மனநோயாளி. இவரைப் போன்ற அரசியல் மனநோயாளிகள் நாடாளுமன்றத்தில் இருந்து மாத்திரமல்ல, இலங்கை அரசியலிலும் இருந்தும் முற்றாக நீக்கப்பட வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோவின் பொதுச் செயலாளருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்:–

"புற முதுகில் குத்தும் பழக்கம் சிங்களவர்களுக்கு இல்லை என்று சரத் வீரசேகர எம்.பி. கூறினார். தமிழர்கள் நன்றி மறந்–தவர்களும் அல்லர் துரோகமிழைத்தவர்களும் அல்லர் என்ப–தனை அவர் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அதற்காக அவருக்குச் சில விடயங்களை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

இலங்கை சுதந்திரமடைய உங்களுக்குத் தமிழர்கள் தேவைப்பட்டார்கள். சேர். பொன். இராமநாதன், சேர்.அருணாச்சலம் ஆகியோர் இலங்கை சுதந்திரமடைய முன்னிலை வகித்தார்கள் என்பதை மறந்து விடக் கூடாது. ஆனால், சுதந்திரத்துக்குத் தமிழர்கள் தேவைப்பட்டார்கள். ஆனால், சுதந்திரத்துக்குப் பின்னர் அவர்கள் உங்களுக்குத் தேவைப்படவில்லை. அதனால் தமிழர்கள் பல அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். 1957 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்தை அறிமுகப்படுத்தி இந்த நாட்டை பாரிய இன வன்முறைக்குள் தள்ளியது சிங்கள அரச தலைவர்கள் என்பதை நீங்கள் எவரும் மறந்து விடக்கூடாது

தனிச் சிங்களச் சட்டத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வாக தந்தை செல்வாவுடன் அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்க ஒப்பந்தம் கைச்சாத்திட்டார். பண்டா – செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனா கொழும்பில் இருந்து கண்டிக்குப் பௌத்த தேரர்களுடன் எதிர்ப்புப் பேரணியில் ஈடுபட்டார்.

சொந்த நாட்டில் தமிழர்களைப் படுகொலை செய்து, அவர்களை அகதிகளாக்கிய பெருமை சிங்கள பெரும்பான்மை அரச தலைவர்களையே சாரும் என்பதையும் நீங்கள் மறந்து விடக் கூடாது.

தமிழர்கள் ஒருபோதும் ஆயுதப் போராட்டத்தை விரும்பவில்லை. அஹிம்சை வழியில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் போராடினார்கள். ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டார்கள். ஆனால், தமிழர்களின் அஹிம்சை வழிப் போராட்டத்தைச் சிங்களத் தலைவர்களே ஆயுதப் போராட்டமாக மாற்றியமைத்தார்கள்.

குருந்தூர்மலையில் சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு எவ்வித சான்றும் இல்லை என வடக்கு மற்றும் கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், தெற்கில் இருந்து கொண்டு குருந்தூர்மலை பௌத்தர்களுடையது என்று கூச்சலிடுகின்றீர்கள். விடுதலைப் புலிகள் காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து பௌத்த விகாரைகள் அழிக்கப்படவில்லை, அவை பாதுகாக்கப்பட்டன.

தெற்கில் இனவாதத்தைப் பரப்பி விடுகின்றீர்கள். கொழும்பில் வாழும் தமிழ் எம்.பி.க்களின் வீடுகளை முற்றுகையிடுவதாகக் கூறி இனவாதத்தைத் தோற்றுவிக்கின்றீர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ மற்றும் சரத் வீரசேகர ஆகியோர் ஒரு கூட்டணியாக இணைந்து இனவாதத்தைப் பரப்பி இந்த நாட்டை இனவாதத் தீக்குள் தள்ளுகின்றீர்கள்.

குருந்தூர்மலையில் பொங்கல் பொங்குவதற்கு இடமளித்த முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியை மனநோயாளி என்று சரத் வீரசேகர கூறுகின்றார். உண்மையில் சரத் வீரசேகரதான் ஒரு அரசியல் மனநோயாளி. இவரைப் போன்ற அரசியல் மனநோயாளிகள் நாடாளுமன்றத்தில் இருந்து மாத்திரமல்ல, இலங்கை அரசியலிலும் இருந்தும் முற்றாக நீக்கப்பட வேண்டும்." – என்றார்.

## குருந்தூர்மலைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விமலசாரநாயக்க தேரர் தலைமையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிற்கு வருகை தந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் ஒன்று வழங்கப்பட்டது.

அந்த மகஜரை வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம் பலாகஸ்வெவ விமலசாரநாயக்க தேரர் தலைமையில் தேசிய ஒற்றுமைக்கான சர்வமத மக்கள் ஒன்றியம் மற்றும் இந்து பௌத்த சங்கத்தினர் இணைந்து நேற்று முன்தினம் கையளித்தனர். அந்த மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

குருந்தூர் மலை உள்ளிட்ட தொல்பொருள் திணைக்களத்திற்குட்பட்ட பிரதேசங்களை தொல்பொருள் திணைக்களம்பாதுகாக்கவேண்டும். தொல்பொருள் திணைக்களத்தின் பிரதேசங்களை பௌத்த சமயம் மட்டும் உரிமை கொண்டாட முடியாது. தொல்பொருள் திணைக்களம் இந்த நாட்டிற்கானது. அது அனைத்து மக்களுக்கும் நம்பிக்கையை தரும் விதமாகச் செயற்பட வேண்டும். தொல்பொருள் பிரதேசங்களிற்கு செல்வதற்கும், வழிபடுவதற்கும் பௌத்த சமயத்திற்கு மட்டும் அனுமதி வழங்காது இந்த நாட்டில் வாழும் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயத்தவர்களுக்கும் வழிபடுவதற்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதியும், அரசாங்கமும் கவனம் செலுத்த வேண்டும். – எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, நாகதீப ரஜமகா விகாரை விகாராதிபதி பூஜ்ய தவத கல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர், மடுக்கந்தை விகாராதிபதி மூவ அட்டகம ஆனந்த தேரர், உலுக்குளம் விகாராதிபதி பெரிய உலுக்குளம சுமணதிஸ்ஸ தேரர், தவ்ஜீத் ஜும்மா பள்ளிவாசல் மௌலவி சதுர்தீன் மௌலவி, ஓமந்தை பங்கு தந்தை ஜெஸ்லீ ஜெகநாதன், கணேசபுரம் கருமாரி நாகபூசணி அம்மன் ஆலய பிரதம குரு பிரமசிறி பூ.முகுந்தன்சர்மா உட்பட சர்வமத மக்கள் ஒன்றியம் மற்றும் இந்து பௌத்த மக்கள் ஒன்றிய பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

**Required**
**Need someone who can host Quiz in English Medium on Stage for AL students.**
**Please contact:-**
**0752604360**

# லொறி - ஹயஸ் மோதி இரு இளைஞர்கள் சாவு

வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து அநுராதபுரம் – கெக்கிராவை பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பிரதான வீதியில் பயணித்த லொறியொன்றும் ஹயஸ் வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது ஹயஸ் வாகனத்தைச் செலுத்திச் சென்ற 28 வயது இளைஞரும், வாகனத்தின் முன் ஆசனத்தில் அமர்ந்து பயணித்த 24 வயது இளைஞரும் உயிரிழந்துள்ளனர்.

ஹயஸ் வாகனத்தின் சாரதி சம்பவ இடத்திலும், அவருடன் பயணித்த மற்றைய இளைஞர் வைத்தியசாலையிலும் உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், லொறியின் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

# போதைப் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு கோரி வவுனியாவில் சடலத்துடன் மக்கள் ஆர்ப்பாட்டம்!



போதைப் பொருள் பாவனையைக கட்டுப்படுத்த கோரியும், இறந்தவருக்கு நீதி கோரியும் வவுனியாவில் சடலத்துடன் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள மதுபானசாலைக்கு சென்றிருந்த இளம் குடும்பஸ்தரை அங்கு மது அருந்திக் கொண்டிருந்த இருவர் அழைத்துக் கதைத்துள்ளனர்.

இதன்போது, அந்த இளம் குடும்பஸ்தரை தாக்கி நிலத்தில் தூக்கிப் போட்டுள்ளனர். இதனால் இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்துள்ளார். அங்கு நின்றவர்கள் அவரது வீட்டிற்குத் தகவல் வழங்கியமையை அடுத்து, குடும்பஸ்தரின் தாயார் வருகை தந்து படுகாயமடைந்த நிலையிலிருந்த மகனைவ்வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்த போதும் அந்தக் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக் கிழமைமரணமடைந்தார்.



இச் சம்பவத்தில், வவுனியா, மகாறம்பைக்குளம் காந்தி வீதியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரதீபன் (தீபன்) என்பவரே உயிரிழந்தார். இவரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று நேற்று பூந்தோட்டம் மயானத்தில் உடக் தகனம் செய்யப்பட்டது.

சடலத்தை எடுத்து வந்த அக்கிராம மக்களும், கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சடலத்துடன் போதைப் பொருள் பாவனைக்கு எதிராகவும், இறந்தாவருக்கு நீதி கோரியும் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் “ஐஸ் – கஞ்சா– மாவா – ஹெரோயின் – போதை மாத்திரை என்பவற்றை தடை செய்” , “தொடர்ச்சியாக அடாவடித்தனம் செய்வோரைக் கைது செய்!”, “மாணவர் சமூகத்தைச் சீரழிக்கும் போதைப் பொருளகளைத் தடை செய்“ என எழுதப் பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

# தினசரி மின் உற்பத்திச் செலவு 60 கோடி ரூபாவால் அதிகரிப்பு

நாளாந்த மின்சார உற்பத்திக்கான செலவு 60 கோடி ரூபாவால் அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நாளாந்த அனல் மின் உற்பத்தி 30 வீதத்தில் இருந்து 64 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நீர் மின் உற்பத்திக்கு போதுமான நீர் இல்லாமையே இதற்குக் காரணமாகும். சராசரியாக நாளொன்றுக்கு மின்சார உற்பத்திக்கு சுமார் 80 கோடி ரூபா செலவாகும். தற்போதைய சூழ்நிலையில், இந்த தொகை 140 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் வரை நீர் மின் உற்பத்தி 17 வீதமாக குறைவடைந்துள்ளது. வறட்சியுடனான வானிலையால், தற்போதைய நிலைமை தொடர்பில் எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருவதாக இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வெறும் வாய்ப் பந்தல் பேச்சு

"சட்டத்தைக் கையில் எடுக்க முற்படுவோருக்கு எதிராக அல்லது அவ்வாறான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு உதவுபவர்களுக்கு எதிராக அவர்களின் பதவி அல்லது அந்தஸ்து எதுவாக இருந்தாலும், அவற்றைக் கவனியாமல் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்" - எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ் தெரிவித்திருக்கிறார்.

இது வாய்ப்பேச்சில் இருந்தாலும் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுமா என்பது பெரிதும் சந்தேகமே.

இந்தக் கருத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்த அதே சமயத்தில்தான், மட்டக்களப்பு மயிலத்த மடுவுக்கு நிலைமைகளைப் பார்வையிடச் சென்ற மதத் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களைக் கொண்ட பொதுமக்கள் குழுவினரை அப்பிரதேசத்தில் அடாவடித்தனமாக குடியேறியிருக்கும் பௌத்த பிக்கு ஒருவர் உட்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கும்பல் ஒன்று சட்டத்தைக் கையில் எடுத்து, அவர்களைப் பலவந்தமாக மறித்து, ஆறு மணி நேரம் அடாத்தாகத் தடுத்து வைத்த பின்னர் விடுவித்திருக்கின்றது.

மாத்தளை ரத்துவத்தை தோட்டத்தில் நடைபெற்ற சம்பவங்களின் போது கூட அடாத்தாக நடந்தவர்கள் விடயத்தில் சட்டம் சரியாகச் செயல்படவில்லை என்பதுதான் பல தரப்பினரதும் குறை.

சிவில், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பட்டயத்தில் இலங்கை கையெழுத்திட்டிருக்கிறது. அதை ஒட்டிய சட்டமும் 2007 இல் இலங்கையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதன்படி, இன,மத குரோதங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வோர் பிணை வழங்கப்பட முடியாத கைதுகளுக்கும், தொடர்ந்து தடுப்புக் காவலுக்கும் உட்படுத்தப்படுவார்கள்.

இந்தச் சட்டம் இலங்கையில் பெரும்பாலும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராகவே ஏவி விடப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆனால், அண்மைக்காலமாக பௌத்த - சிங்களப் பேரினவாத வெறிப்போக்கில், சிறுபான்மையினருக்கு எதிராக, பேரினவாதத்தைத் தூண்டும் கருத்துக்களை வெளியிடுகின்ற மேர்வின் சில்வா போன்ற இன வெறியர்களுக்கு எதிராக இந்தச் சட்டம் பாய்வதேயில்லை.

நாட்டில் சிறுபான்மையினருக்கு எதிராக பெரும் கலவரத்தை உருவாக்கக்கூடிய பேரினவாதக் கருத்துக்கள் தொடர்ந்து பகிரங்க வெளியில் வெளியிடப்பட்டு வருகின்றமை கண்கூடு.

மேற்படி சட்டத்தின் கீழ், அத்தகையோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கையை ஆரம்பத்தில் இருந்து எடுத்தால் தான் நிலைமை மோசமடையாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

ஆனால் சட்டத்தை அமலாக்கும் - நடைமுறைப்படுத்தும் - பொலிஸார் உட்பட்ட தரப்புகள் இத்தகைய சட்டங்களை உரிய முறையில் பிரயோகித்து, இன வெறியைத் தூண்டுபவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்காமல் பார்த்திருக்கிறார்கள். பேரினவாத வெறிப்போக்கு தூண்டப்படும் அபாய நிலை ஏற்படுவதற்கு இந்தச் சட்டம் சரியாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பது முக்கிய காரணமாகும்.

அப்படியான சூழல் நிலவும் போது, சட்டத்தைக் கையில் எடுக்க முற்படுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை என்று வாய்ப்பந்தல் போடுகிறார் பொது சனப் பாதுகாப்பு அமைச்சர்.

நாடாளுமன்றத்திலும் பொது வெளியிலும் தென்னிலங்கைப் பேரினவாதிகள் கக்கி வரும் இனவாதக் கருத்துக்கள் நாட்டில் மீண்டும் ஓர் இனக் கலவரம் வெடித்து, இரத்த ஆறு ஓடுவதற்குக் கட்டியம் கூறுவனவாக இருக்கின்றன.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான அரசியல் தலைவர்கள் வெறும் தத்துவங்களை பொது வெளியில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பொறுப்பற்ற போக்கு மோசமான எதிர்கால நிலைமைக்கு வழி செய்யப் போகின்றது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அமைதித் தீர்வு, அதிகாரப் பரவலாக்கம் என்றெல்லாம் பேசுகின்றார்கள். ஜனாதிபதியிலிருந்து அனைத்து அரசியல் தலைவர்களும் அதையே வலியுறுத்துகின்றார். ஆனால் அவற்றுக்கு எதிர்மாறாகத்தான் விடயங்கள் அரங்கேறி வருகின்றன.

நல்லிணக்கத்துக்கு எதிரான பேரினவாத வெறிதான் தென்னிலங்கையில் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. 13 ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கம், அதிகாரப் பகிர்வு என்றெல்லாம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குத்தி முறிந்தார். ஆனால் அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள்தான் இங்கு பெரும் எடுப்பில் கட்டவிழ்கின்றன என்பது கண்கூடு.

அந்த வரிசையில் இன்னொன்று.

நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரகடனப்படுத்துகிறார். சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கூட்டுவதும், பொருளாதார வீழ்ச்சி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான ஒரு வழி என்பது யாவரும் அறிந்ததே.

மாகாண ஆளுநர்கள் மற்றும் உயர் அதிகாரிகளை அழைத்து, சுற்றுலாப் பயணத் துறையை ஊக்குவித்து, மேம்படுத்த இயன்றவற்றைச் செய்யுங்கள் என்று அழுத்தம் கொடுக்கிறார் ஜனாதிபதி. மாகாண ஆளுநர்களும் – வடக்கு ஆளுநர் உட்பட – சுற்றுலாத் துறையை மேம்படுத்தத் தலைகீழாக நின்று முயற்சிக்கின்றார்கள்.

நேற்றும் கூட நாடாளுமன்றத்தில் சுற்றுலாப் பயணத் துறை தொடர்பில்தான் விசேட விவாதம். அந்த விவாதம் கொழும்பு ஜெயவர்தனபுர நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்க அத்துறைக்கு ஆப்படிக்கும் வேலை இங்கு யாழ்ப்பாணத்தில் கட்டவிழ்கிறது.

வழமை போல இம்முறையும் இவ்விடயத்திலும் குசும்பு பண்ணுபவர்கள் நமது படையினர்தான். இம்முறை கடற்படையின் ஒரு பிரிவு.

வடக்கே வரும் சுற்றுலாப் பயணிகளின் முக்கியமான பயண மையம் கசூரினா பீச். பெரும் எண்ணிக்கையான சுற்றுலாவிகள் அங்கு திரள்வது வழக்கம். யாழ்ப்பாணத்தில் சுற்றுலாப் பயணிகள் செல்லக்கூடிய ஓரிரு இடங்களில் அது முக்கியமானது. முதன்மையானது.

அங்கு சுற்றுலாப் பயணிகளைக் கவருவதன் மூலம் தன்னுடைய வருமானத்தையும் ஈட்டிக் கொள்ள காரைநகர்ப் பிரதேச சபை தலையால் கிடங்கு கிண்டுகிறது.

வரும் சுற்றுலாவிகளை அமைதியான கசூரினா பீச்சை ஒட்டிய கடலில் பாதுகாப்பான முறையில் படகுகளில் அழைத்துச் சென்று, மூன்று கிலோ மீற்றர் சுற்றிப் பார்த்தல், பவளப் பாறைகளைக் காட்டுதல், வெளிச்ச வீட்டைச் சுற்றிக்காட்டுதல், பருத்தித்தீவு, நயினாதீவு, கடற்கோட்டை போன்றவற்றைச் சுற்றிப்பார்த்தல் போன்ற கவர்ச்சியான செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. நீண்ட காலமாக அது அங்கு தொடர்கின்றது.

நேற்றுக் கடற்படையின் உயிர் காப்புப் பிரிவினர் திடீரென மேற்கொண்ட அதீத கெடுபிடிகள் மற்றும் களேபரங்களை அடுத்து இந்த சேவைகளில் ஈடுபட்ட படகுகள் எல்லாம் கரைக்கு இழுக்கப்பட்டன. வேலை நிறுத்தம் போன்ற நடவடிக்கைதான்.

நல்லிணக்க முயற்சிகளுக்கு நடப்பது போல சுற்றுலாப் பயணிகளைக் கவரும் திட்டத்துக்கும் மூடு விழா ஆரம்பமாகி விட்டது என்றே தோன்றுகின்றது.

காரைநகர்ப் பிரதேச சபை, யாழ். செயலகம், வடக்கு ஆளுநர் தரப்பு ஆகிய சம்பந்தப்பட்ட பிரிவுகள் விரைந்து தலையிட்டு, தீர்வு காணாவிட்டால் கசூரினா பீச் மீண்டும் வெறிச்சோடிப் போகும் நிலைமைதான் வரும் என்று நினைக்கிறேன்.

## நேற்றும் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் அப்புத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சமூகப் பிரதிநிதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

அத்துமீறி பௌத்த விகாரை அமைக்கப்படுவது குறித்தும், காணி அபகரிப்பு பற்றியும் நேரில் ஆராய்வதற்கு நேற்று அங்கு சென்ற மதத் தலைவர்கள், பண்ணையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உட்பட 18 பேரை பௌத்த தேரர் தலைமையிலான காணி அபகரிப்புக் குழுவினர் 6 மணித்தியாலங்களாக வழிமறித்துத் தடுத்து வைத்திருந்தனர். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களைப் பொலிஸாரே மீட்டு வந்தனர்.

நேற்றுக் காலை மயிலத்தமடு – மாதவனை பிரதேசத்துக்கு வாகனங்களில் இரண்டு அருட்தந்தையர்கள், ஒரு மௌலவி, இரண்டு இந்துக் குருக்கள், 3 ஊடகவியலாள்கள் உட்பட 18 பேர் அடங்கிய குழுவினர் சென்று பண்ணையாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிவிட்டுப் பிற்பகல் ஒரு மணியளவில் திரும்பிக் கொண்டிருந்தனர்.

இந்தநிலையில் மட்டக்களப்பு எல்லைப் பகுதியில் அமைந்துள்ள கம்பி பாலத்துக்கு அருகாமையில் வாகனங்களில் திரும்பிக் கொண்டிருந்த மதத் தலைவர்களின் வாகனங்களைத் தேரர் ஒருவர் தலைமையிலான நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் ஒன்றிணைந்து, வீதித் தடையைப் போட்டு வாகனங்களைத் தடுத்து நிறுத்தி, வாகனங்களின் திறப்புக்களைப் பிடுங்கி எடுத்து, அவர்களைத் தடுத்து வைத்தமையுடன் இந்துக் குருக்கள் ஒருவரைத் தாக்க முற்பட்டதையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து கரடியனாறு மற்றும் அரங்கலாவ பொலிஸ் பொறுப்பதிகாரிகள் கொண்ட பொலிஸ் குழுவினர் அந்தப் பகுதிக்குச் சென்று பௌத்த தேரர் தலைமையிலான குழுவினருடன் பேச்சில் ஈடுபட்டனர். இதன்போது ஊடகவியலாளர்களின் கமராவில் பதிவு செய்த காட்சிகள் அனைத்தையும் பௌத்த தேரர் தலைமையிலான குழுவினர் அச்சுறுத்தி அழித்தனர். அத்துடன் இந்தச் செய்தியை ஊடகங்களில் பிரசுரிக்க கூடாது எனக் கடிதம் ஒன்றையும் அவர்கள் வற்புறுத்திப் பெற்றனர்.

தொடர்ந்தும் பௌத்த தேரர் தலைமையிலான குழுவினருடன் பொலிஸார் பேச்சில் ஈடுபட்டனர். 6 மணித்தியால தடுத்துவைப்பின் பின்னர் 18 பேரையும் பொலிஸார் அங்கிருந்து மீட்டு வந்தனர்.

## மயிலத்தமடு அடாவடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விடுவிக்கக் கோரிக் குரல் கொடுத்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

"வீழ்ந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன என்று கூறிக் கொண்டிருக்கும் நேரத்தில், 1948 ஆம் ஆண்டில் இருந்து தமிழர்களை அழித்தது போதாதென்று இப்போது மீண்டும் தமிழர்களை அழிப்பதற்கான முயற்சி தீவிரமடைந்துள்ளது.

மட்டக்களப்பு, மயிலத்தமடு பகுதியில் தொடர்ச்சியாக அச்சுறுத்தலை எதிர்நோக்கி வரும் பண்ணையாளர்களைச் சந்திப்பதற்காக சர்வமதக் குழு சென்றுள்ளது. இஸ்லாமிய மௌலவி, இரண்டு கிறிஸ்தவ மதக்குருக்கள், இந்து மத குரு ஒருவர் மற்றும் ஊடகவியலாளர்களும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் அங்கு சென்றிருந்தனர். அவர்கள் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த பின்னர் திரும்பி வந்து கொண்டிருந்த போது, பௌத்த மதகுரு தலைமையிலான சிங்களப் பெரும்பான்மைக் குழுவொன்று அவர்களை வழிமறித்து பல மணித்தியாலங்களாக தடுத்து வைத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் எமது கட்சித் தலைவர் கஜேந்திரகுமாரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து அவர் ஜனாதிபதி செயலாளரைத் தொடர்புகொண்டு கூறியமையுடன், ஜனாதிபதி செயலாளர் பொதுமக்கள் பாதுகாப்பு செயலளரிடம் இது பற்றி கூறியுள்ளார் என்று தெரிவித்துள்ளார். ஆனால் மூன்றரை மணித்தியாலங்கள் கடந்தும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் சென்ற வாகனங்களின் திறப்பு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அங்கு சுற்றிவளைப்பில் ஈடுபட்டுள்ள 150 இற்கும் மேற்பட்ட சிங்களக் குழுவினருக்கு சாராயம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களிடம் சிக்கியுள்ளவர்களின் உயிருக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தயவு செய்து இங்கு சபைக்குத் தலைமை தாங்கும் உறுப்பினர் இந்த விடயம் தொடர்பில் உடனடியாகச் சபாநாயகருக்கு அறிவித்து அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறான இனவெறிச் செயற்பாடுகள் தொடர்ந்தால் மீண்டும் இந்த நாட்டில் தமிழர்கள் கடந்த காலங்களைப் போன்று கொன்று குவிக்கப்படக் கூடிய ஆபத்துக் காணப்படுகின்றது. இதனால்தான் சுயாட்சி உரிமையைக் கோருகின்றோம்."

– என்றார்.

## முல்லை. நீதிபதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

தலைவரும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

"குருந்தூர்மலையில் கை வைப்பதை அடிப்படைவாதிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். சிங்கள பௌத்தர்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்" – என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

"தொல்பொருள் கட்டளைச் சட்டத்துக்கு எதிராகவே முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி குருந்தூர்மலையில் பொங்கல் பொங்கும் இந்து மத வழிபாட்டில் ஈடுபட அனுமதி வழங்கியுள்ளார். தொல்பொருள் கட்டளைச் சட்டத்தில் "பௌத்தர்களின் மனங்களைப் பாதிக்கும் செயற்பாடுக

(6ஆம் பக்கம் பார்க்க...)

Singhams Media
அலை ஓசை
துல்லியமான ஒலிநயத்துடன் உங்கள் நிறுவனங்களின் பெயர்களை ஒலிபரப்பு செய்து கொள்ள நாடுங்கள்.
திருநெல்வேலி பகுதியில்.
ஆடியபாதம் வீதி, திருநல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 076 610 5467, 077 124 2732

# நல்லூர் முருகன் வீதியுலா

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் இரண்டாம் நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. முருகப்பெருமான் வெள்ளி மயில் வாகனத்திலும் வள்ளி,தெய்வானை வெள்ளி அன்னவாகனத்திலும் வீதியுலா வந்தனர்.

(படங்கள் :- பிரபாகன் டிலக்சன்)



## முல்லை. நீதிபதிகள்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ளுக்கு இடமளிக்கக்கூடாது.

அவ்வாறான செயற்பாடுகள் தண்டனைக்குரிய குற்றம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான தெளிவான கட்டளைச் சட்டங்கள் காணப்படுகின்ற நிலையில் நீதிபதி தவறான கட்டளைகளைப் பிறப்பித்துள்ளமை பாரிய பிரச்சினைக் குரியது.

குருந்தூர்மலைக்குக் கடந்த 18 ஆம் திகதி தமிழ் அரசியல்வாதிகளுடன் வருகை தந்த குண்டர்கள் அப்பகுதியில் இருந்த குருந்தூர்மலையின் விகாராதிபதி சாந்த போதி தேரரைத் தகாத வார்த்தைகளால் தூற்றி, வெளியேற்றினர். இவ்வாறான செயற்பாடுகளால் பௌத்தர்களின் மனம் பாதிக்கப்படாதா? நாங்கள் பொறுமையாக இருக்கின்றோம். அந்தப் பொறுமையை கோழைத்தனம் என்று கருதக் கூடாது

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ஒரு மனநோயாளி என்றே கூறப்படுகின்றது. நீதிபதியின் மனைவியே இந்த நீதிபதி ஒரு மனநோயாளி ஆகவே அவரைத் தான் மனநோய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கிறார் என முல்லைத் தீவுப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். மனநோயால் பாதிக்கப்பட்டுள்ள ஒருவர் எவ்வாறு நீதிபதியாகச் செயற்பட முடியும்? இவர் பௌத்தர்களுக்கு இடமளிக்கமாட்டார். ஆனால், தமிழர்கள் பொங்கல் பொங்குவதற்கு இடமளிப்பார். மன நோயாளியான நீதிபதியால் சரியான தீர்மானத்தை எடுக்க முடியாது. ஆகவே முல்லைத்தீவு நீதிமன்றத்துக்குப் பிறிதொரு நீதிபதி ஒருவரை நியமிக்குமாறு நீதி அமைச்சரிடமும், நீதிச் சேவை ஆணைக்குழுவிடமும் வலியுறுத்துகின்றேன்.

இனவாத கொள்கையற்ற தமிழ் நீதிபதிகள் பலர் நாட்டில் உள்ளார்கள். ஆகவே, அவர்களை முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்க வேண்டும். யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் நீதிபதி இளஞ்செழியனின் உயிரைச் சிங்கள, பௌத்த பொலிஸாரான சரத் ஹேமச்சந்திர தனது உயிரைக் கொடுத்து பாதுகாத்தார். நீதிபதி இளஞ்செழியன் அந்தப் பொலிஸாரின் பிள்ளைகளின் கல்விச் செலவுகளை முழுமையாகப் பொறுப்பேற்று அவர்களுக்கு இன்றும் உதவி செய்து வருகின்றார்.

எம் மத்தியில் இனவாதம், மதவாதம் கிடையாது. இல்லாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்க வேண்டாம் என்பதைத் தமிழ் அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் விடுதலைப் புலிகளைப் போசித்தார். இறுதியில் புலிகளே அவரைப் படுகொலை செய்தார்கள். அமிர்தலிங்கத்தின் மனைவி மற்றும் இரு பிள்ளைகளைச் சிங்கள பௌத்த பாதுகாவலர்களே பாதுகாத்தார்கள்.

சிங்கள இனத்துக்கு எதிராகச் செயற்படுபவர்களை – கடுமையாக விமர்சிப்பவர்களை – சிங்கள பௌத்தர்களே பாதுகாத்துள்ளார்கள். இவ்வாறான இனம் உலகில் எங்கும் இருக்காது. சிங்களவர்களுக்கும், பௌத்த மரபுரிமைகளுக்கும் எதிராகச் செயற்படும் தமிழ் அரசியல்வாதிகளின் பாதுகாப்புக்குச் சிங்கள பௌத்தர்களே உள்ளார்கள்.

குருந்தூர்மலையில் கை வைப்பதை அடிப்படைவாதிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். சிங்கள பௌத்தர்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தொல்பொருள் விவகாரம் நாட்டின் தற்போதைய பிரதான தேசியப் பிரச்சினையாக உள்ளது. தொல்பொருள் எமது உரிமை. அத்துடன் தொல்பொருள் எமது தேசிய அடையாளம். அந்தவகையான தேசிய அடையாளத்தை அழிக்க முயற்சிப்பது தேசத்துரோகம். தூர நோக்கமற்ற வகையில் பிறப்பிக்கப்படும் கட்டளைகளால் இனவாத முரண்பாடுகள் தோற்றம் பெறும். அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் அதற்குப் பொறுப்பான நீதிபதியும், தமிழ் அரசியல்வாதிகளும்தான் பொறுப்பு." – என்றார்.




# Pearl Island Inn

## Hotel & Restaurant

Dine - in | Take Away | Soft Drinks

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்

உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),

உலகத் தரம் வாய்ந்த

யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்

உணவு வகைகள்

மற்றும்

குளிர்பானங்களை இங்கிருந்தும்

உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று

சுவைத்து மகிந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**

S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**

077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com





G20
भारत 2023 INDIA
सत्यमेव जयते
Azadi Ka Amrit Mahotsav
இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்
“ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்”
சிறப்புப் பட்டிமன்றம்
நவீன தொழில்நுட்பங்களின் வரவு...
வரமே! வரமல்ல!
திருமதி பாரதி பாஸ்கர்
பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன்
திரு. ச. லலிசன்
திரு. ந. விஜயசுந்தரம்
திரு.எஸ்.ராஜா
(நடுவர்)
திரு. நடராஜன்
செல்வி இ.ஹார்த்தியாயினி
திரு. ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ
திரு. ஜ. யோகநாதன்
இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
காலம் : 25 ஆகஸ்ட், 2023
நேரம் : மாலை 6.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்

# வறட்சி காரணமாக சிறுவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தல்

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக சிறுவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என சிறுவர் நோய்கள் தொடர்பான நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறுவர்கள் வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடும் போது அதிகளவில் வியர்வை வெளியேறுவதால் நீர்ச்சத்து குறைவடையும் வாய்ப்பு காணப்படுகிறது என சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய்கள் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

நீர், இளநீர், தேசிக்காய் சாறு, தோடம்பழம், மாதுளம்பழம், ஜீவனி போன்ற நீராகாரங்களை சிறுவர்களுக்கு அதிகமாக வழங்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், சிறுவர்கள் நீரில் அதிகமாக விளையாடுவதால் தோல் நோய்களை தவிர்த்துக்கொள்ளலாம் என வைத்தியர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பு ஊடகவியலாளர்கள் போராட்டம்





மட்டக்களப்பு, மயிலத்தமடு – மாதவனைப் பிரதேசத்துக்கு நேற்றுக் களவிஜயம் மேற்கொண்டிருந்த சர்வமதத் தலைவர்கள், சிவில் அமைப்பினர் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட குழுவினரை அங்கு அத்துமீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பௌத்த தேரர் தலைமையிலான பெரும்பான்மை யினத்தவரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவ்வாறு செய்தவர்களுக்கு எதிராக உடன் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும் ஊடகவியலாளர்களால் நேற்று மாலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஊடக சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகவியலாளர்கள் பங்கேற்றனர்.






# தமிழ்த் தலைவர்களின் உயிருக்கு ஆபத்து என சபையில் எச்சரிக்கை

## செல்வராசா கஜேந்திரன் அபாயமணி



தமிழ்த் தலைவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

“எமது கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டைச் சுற்றி வளைக்கப் போவதாக உதய கம்மன்பில பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார். அச்சுறுத்தும் வகையில் இந்த அழைப்பு உள்ளது.

இவ்வாறாக தமிழ்த் தலைவர்களின் உயிருக்கு நீங்கள் ஆபத்தை ஏற்படுத்த முயல்கின்றீர்களா? என்ற கேள்விகள் எழுகின்றன. இதனால் இவ்வாறான இனவாதச் செயற்பாடுகள் மூலமாக குருந்தூர்மலை போன்ற இடங்களில் தமிழர்களின் வரலாறுகளை மாற்றியமைக்க முன்னெடுக்கும் நடவடிக்கைகளை ஒருபோதும் ஏற்க மாட்டோம்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட நாவற்குழி, தையிட்டி, குருந்தூர் விகாரைகள் அகற்றப்பட வேண்டும். தொல்பொருள் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.” – என்றார்.

# நிலத்தடி நீரில் மாற்றம் காணப்படுமாயின் உடனடியாக பரிசோதிக்குமாறு அறிவுரை

நாட்டில் நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக நிலத்தடி நீரின் சுவை, மணம் மற்றும் நிறத்தில் மாற்றம் காணப்படுமாயின் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அலுவலகத்தில் பரிசோதிக்குமாறு அந்தச் சபை பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

வறட்சி காரணமாக நிலத்தடி நீர் மட்டம் குறைவடைந்துள்ளதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதி பொது முகாமையாளர் ஆர்.எம்.எஸ். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய கொழும்பு, புத்தளம், அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் பரிசோதனை நிலையங்களில் நீர் மாதிரிகளை பரிசோதிக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ‘புஷ்பா’ படப் பாணியில் லொறியில் ரகசிய அறை

## அறு நூறு கிலோ கஞ்சா கடத்திய மத போதகர் உள்பட 3 பேர் கைது



தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகே கயத்தாறு சுங்கச்சாவடிப் பகுதியில் புகையிலை மற்றும் கஞ்சா ஒழிப்பு தனிப்படை காவல்துறையினர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாலாஜி சரவணன் உத்தரவின் பேரில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக வந்த சென்னை பதிவு எண் கொண்ட மினி கண்டெய்னர் லொறியை நிறுத்தித் தனிப்படை காவல்துறையினர் சோதனை மேற்கொள்ள முயன்றனர்.

அப்போது ஓட்டுநர் முன்னுக்குப் பின் முரணான தகவலை கூறியதை அடுத்து தனிப்படை காவல்துறையினர் அதிரடியாக கண்டெய்னர் லொறியை திறந்து பார்த்துள்ளனர். அப்போது அதில் இரகசிய அறை அமைத்து, தடை செய்யப்பட்ட கஞ்சா வைத்திருந்தமை தெரியவந்தது. இதனை அடுத்து லொறியில் வந்த 3 பேரையும் பிடித்து கோவில்பட்டி மதுவிலக்கு பிரிவு காவல் நிலையத்தில் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் தூத்துக்குடிக்கு கஞ்சாவை கொண்டு செல்ல முற்பட்டது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டம் ஆரோக்கிய புரத்தைச் சேர்ந்த (மத போதகர்) ஜான் அற்புத பாரத் மற்றும் பாண்டிச்சேரி மாநிலம் ஏனாம் பகுதியைச் சேர்ந்த சக்தி பாபு(39) தூத்துக்குடி ஸ்டேட் பேங்க் காலனியைச் சேர்ந்த விஜயகுமார் (36) உள்ளிட்ட 3 பேரையும் கைது செய்து மினி கண்டெய்னர் லொறியில் 300 பாக்கெட்டுகளில் கொண்டுவரப்பட்ட 600 கிலோ கஞ்சா மற்றும் மினி கண்டெய்னர் லொறியையும் தனிப்படை பிரிவுக் காவல் துறையினர் பறிமுதல் செய்தனர். மதுவிலக்கு டிஎஸ்பி சிவசுப்பு மற்றும் கோவில்பட்டி டிஎஸ்பி வெங்கடேஷ் உள்ளிட்டோர் தற்போது கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பிடிபட்ட கஞ்சாவின் இந்தியாவின் மதிப்பு சுமார் ஒரு கோடி ரூபா இருக்கும் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். கோவில்பட்டி பகுதியில் 600 கிலோ அளவில் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குவதில் சிக்கல் நிலை



நலன்புரி நன்மைகள் சபையின் தலைவரை நியமிக்காத காரணத்தால் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

கொடுப்பனவை செலுத்துவதற்கான அனுமதியை வழங்குதற்கு நலன்புரி நன்மைகள் சபை கூட்டப்பட வேண்டும் என சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார்.

எனினும், தலைவர் ஒருவர் நியமிக்கப்படாமையினால் கொடுப்பனவை வழங்குவதற்கான அனுமதியை வழங்க முடியாமல் போயுள்ளது.

இந்தச் சபையின் தலைவராக செயற்பட்ட பி.விஜேரத்ன கடந்த சில நாள்களுக்கு முன்னர் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார்.

அதனடிப்படையில், புதிய தலைவராக ஜயந்த விஜேரத்னவை நியமிக்குமாறு அரசமைப்புப் பேரவைக்கு ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை அரசமைப்புப் பேரவை வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனிடையே, நலன்புரி நன்மைகள் சபையினால் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பெயர் பட்டியலில் சமுர்த்தி பயனாளர்கள் பலரின் பெயர்கள் உள்ளடக்கப்படவில்லை என சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் கமல் பத்மசிறி கருத்து தெரிவிக்கையில், விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத பலரின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.



## 25ம் திகதி இலங்கைக்கு வரும்

# சொப்பன சுந்தரி

## குஷியாகக் காத்திருக்கும் இளைஞர்கள்

கரகாட்டக்காரன் காலம் முதலாய் அனேகமானோரால் தேடப்பட்டுக் கொண்டிருக்கும் 'சொப்பன சுந்தரி' யை மாதவனும் அவரது சினிமா நண்பர்களும் சுமார் ஆறு வருடங்களாக மறைத்து வைத்திருந்திருக்கிறார்கள். இதற்கு மேலும் ஒளித்து வைத்திருப்பது நல்லதல்ல என்று நினைத்தவர்கள், எதிர் வரும் ஓகஸ்ட் 25ஆம் திகதி 'சொப்பன சுந்தரி'யை ரிலீஸ் செய்யப் போவதாக அறிவித்ததில் இருந்து இளைஞர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு உருவாகி யுள்ளது.

**யார் இந்தக் குழுவினர்? ஏன் இவர்கள் ஆறு வருடங்களாகச் 'சொப்பன சுந்தரி'யை மறைத்து வைத்திருந்தார்கள்?**

கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு முன்னிருந்தே பல குறும்படங்கள் மூலமாக இலங்கைத் திரைத் துறையினரின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்த்தவர் இயக்குனர் மாதவன் மகேஸ்வரன். 'அப்பால்', 'என்னாச்சு?' போன்ற குறும்படங்கள் மூலம் நன்கு அறியப்பட்ட மாதவன், வெவ்வேறு விருது விழாக் களில் பல விருதுகளைத் தனது குறும்படங்கள் மூலம் வென்றுள்ளார். இந்த இளம் இயக்குனர் தன் சினிமா நண்பர்களின் கூட்டணியில் இயக்கியி ருக்கும் முதலாவது முழுநீளத் திரைப்படமே 'சொப்பன சுந்தரி'.

2017ம் ஆண்டில் படமாக்கப்பட்டு, சுமார் ஆறு வருடங்களாக பின்களத் தயாரிப்புப் பணி களில் இருந்த 'சொப்பன சுந்தரி' பல சவால் களைத் தாண்டி இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி திரைக்கு வந்து ரசிகர்களைக் குஷிப்படுத்தப் போகிறது.

இலங்கையில் தமிழில் உருவாக்கப்படும் முழுநீளத் திரைப்படங்கள் பல இப்போது வெளி வந்த வண்ணம் இருக்கின்ற இந்த சூழலில் ரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நோக்கத்தோடு தயாரிக்கப் பட்டிருக்கும் 'சொப்பன சுந்தரி'யும் திரைக்கு வருவது, இலங்கையின் தமிழ் சினிமாத்துறை மும்முரமாக இயங்கத் தொடங்கி விட்டது என்பதற்கான அடையாளமே!.




மாதவனின் ஆஸ்தான கதாசிரியரும் நடிகருமாகிய ஜோயல், 'சொப்பன சுந்தரி'க்கான கதை, திரைக்கதையை எழுதி, ஒரு பிரதான கதாபாத்திரத்திலும் நடித்திருக்கின்றார். கொழும்பு நகரைக் கதைக்களமாக கொண்டு உருவாகி யிருக்கும் இத்திரைப்படத்தில், இலங்கையின் புகழ் பூத்த கதாநாயகி நிரஞ்சனி சண்முகராஜா 'சுந்தரி' கதாபாத்திரத்திலும், அவருடன் இணைந்து பேர்ழிஜா, கஜானன், நரேஷ், தனுஷ் செல்வ நாதன், வருண் துஷ்யந்தன், ரவி, ஜெனோஷன் ஆகியோரும் முக்கிய பாத்திரங்களில் நடித்திரு க்கிறார்கள். இயக்குனர் மாதவனும் ஓர் பிரதான பாத்திரமேற்று நடித்திருக்கிறார்.

ஒரு பெரும் சிக்கலில் சிக்கிக் கொள்ளும் மூன்று நண்பர்களும், அவர்களுக்கு விளையும் வில்லங்கங்களும் என்று விறுவிறுப்பான இரண் டரை மணிநேர முழுநீள நகைச்சுவைத் திரில்லர் திரப்படபடமாக 'சொப்பன சுந்தரி' தயாராகி இருக்கிறது.

எல் எக்ஸ்ரீமோ, என்னாச்சு? என்று குறும்படங்கள் மூலம் தங்களின் ஒத்திகைகளைப் பார்த்து வைத்திருந்த மாதவனும் நண்பர்களும் அடுத்து ஒரு முழுநீளத் திரைப்படத்தை எடுக்கலாம் என்று 2017ம் ஆண்டு முடிவு செய்தார்கள். அந்த முடிவின் விளைவாக காதல், கொமெடி, பாடல்கள், ஆக்ஷன், ட்விஸ்ட் என முற்றுமுழுதான கொமெர் ஷல் பாணியில் இந்த 'சொப்பன சுந்தரி'யை உருவாக்கியிருக்கிறார்கள்.

**சொப்பன சுந்தரி திரையிடப்படும் திரையரங்கு விபரங்கள் இதோ:**

- SAVOY 3D - WELLAWATE
- CONCORD - DEHIWALA
- REGAL - DEMATAGODA
- PVR - COLOMBO (FROM SEPT 01)
- REGAL - JAFFNA
- NELSON - TRINCOMALEE
- GK CINEMAX - KALMUNAI
- AMUTHA CINEMA - VAVUNIYA

## இரண்டரை மணிநேர முழுநீள நகைச்சுவைத் திரில்லர்

கிட்டத்தட்ட ஆறு மாதங்களாகத் தயாரிப் பாளர்களின் முதலீட்டிற்காக காத்திருந்த 'சொப்பன சுந்தரி', பின்னர் மாதவன், கஜானன் மற்றும் ஜோயலின் சொந்தத் தயாரிப்பில் 2017ம் ஆண்டின் பிற்பகுதியில் படமாக்கப்பட்டது. சமல் விக்ரமசிங்க வின் ஒளிப்பதிவிலும், இயக்குனர் மாதவனின் படத் தொகுப்பிலும் உருவாகி இருக்கும் காட்சிகளுக்கு இசையமைத்திருக்கிறார் பிரபல இசையமைப்பாளர் ஜீவானந்தன் ராம். ஜீவாவின் மெட்டுகளுக்கு வருண் துஷ்யந்தன், ராகுல் ராஜ் மற்றும் சங்கர் வரிகள் எழுதியுள்ளனர்.




இத்திரைப்படத்தின் படப்பிடிப்பிற்குப் பின்ன ரானதொழில்நுட்பப்பணிகளையும்செய்துகொண்டு, அதே கலைஞர்களின் கூட்டணியில், 2020ஆம் ஆண்டில் **'SUNDAY'** எனும் இணையத் தொடரையும் Dialog நிறுவனத்தின் VIU செயலிக்காக மாதவன் இயக்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத் தொடரில் பேர்ழிஜா முதன்மைக் கதாபாத்திரத்தி லும், இலங்கை சினிமாத் துறையில் பலரது அன்பையும் வென்ற கலைஞன் அமரர் தர்ஷன் தர்மராஜ் அவர்கள் ஒரு பிரதான பாத்திரத்திலும் நடித்திருந்தனர்.

இலங்கையில் இன்னும் ஒரு முற்று முழுதான தொழிற்துறையாக மாற்றம் பெறாத தமிழ் திரைப்படத் துறையில் ஒரு முழுநீளத் திரைப் படைத்தைத் தயாரித்து வெளியிடுவது என்பது, அதுவும் தயாரிப்பாளர்கள் யாருமே இல்லாமல் இம்மாபெரும் இலக்கை ஆறு வருடங்களாகப் போராடி அடைவது என்பது உண்மையிலேயே ஒரு உன்னதமான சாதனைதான். இக்கூற்றை வழி மொழிவதைப்போல அமைந்திருக்கிறது, ஜுலை மாத ஆரம்பத்தில் இணையத்தில் வெளியான 'சொப்பன சுந்தரி' ட்ரெய்லர் இளைஞர்கள் மத்தியில் பெற்று வரும் அமோகமான வரவேற்பு.



சொப்பன சுந்தரி படக் குழுவில் சிலர்

ஒரு நண்பர் பட்டாளத்தின் உழைப்பிலும், பெரும் பொருட்செலவிலும் உருவாகி, ஆறு வருட விடாமுயற்சியால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி திரைக்கு வரும் 'சொப்பன சுந்தரி', பார்ப்பவர்களை சிரித்து மகிழ வைக்கப் போவதும், இளைஞர்களால் மகிழ்ந்து கொண்டாடப்படப் போவது நிச்சயம்.



# இந்தியாவின் மின் உற்பத்தி நிலையங்கள் யாழ்.தீவுகளில் 400 கோடி ரூபா செலவில்



(என்.புவியரசன்)

நெடுந்தீவு, அனலைதீவு, மற்றும் நயினாதீவு ஆகிய தீவுகளிற்கான மின் உற்பத்தி நிலைய வேகைகள் ஆரம்பிக்கப்படாமல் இடை நிறுத்தப்பட்ட நிலையில், இந்தப் பணி ஒரு கோடி இருபது லட்சம் டொலர் (சுமார் நானூறு கோடி ரூபா) நிதியில் இந்திய அரசினால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மூன்று தீவுகளின் மின் உற்பத்தியைத் தங்கு தடையின்றி மேற்கொள்ளும் நோக்கில் கூட்டுப்பொறிமுறை மின் உற்பத்தியாக காற்றாலை, சூரியசக்தி மற்றும் இயந்திர உற்பத்தி ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்த வகையில் இந்த உற்பத்தி நிலையச்செயற்பாட்டை முன்னெடுக்க 2017ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டது. அதற்காக எழுவைதீவில் ஓர் மாதிரி மின் உற்பத்தி நிலையமும் அமைக்கப்பட்டது.

இவ்வாறு 3 தீவுகளிலும் அமைக்கும் மின் உற்பத்தி நிலையங்களிற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி கடனாக வழங்கவும் முன் வந்தது. இதற்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டு வரைபடங்கள், அனுமதிகள், பத்திரிகை விளம்பரங்கள் என அனைத்தும் பணிகளும் 2020ஆம் ஆண்டே பூர்த்தி செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதிய அமைச்சரவையின் அனுமதிக்காக கொண்டு வரப்பட்டபோதே இந்த திட்டம் எந்த நாட்டிடம் செல்கின்றது என்ற விடயம் அம்பலமானது. சீனாவின் சினோசர் எடக்வின் என்ற நிறுவனத்திடம் இந்தப் பணியை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கிய விடயம் மறுநாள் பத்திரிகைச் செய்தியில் வெளியிட்டபோதே இத் திட்டம் சீனாவின் கைக்கு சென்றுவிட்டமை அம்பலமானது.

இதனையடுத்து அலறியடித்து எழுந்த இந்தியா இதன் சாதக பாதக நிலையை ஆராய்ந்தது. இந்தியாவில் இருந்து வெறும் 46 கிலோ மீற்றர் தொலைவில் சீனா 2 ஆண்டுகளாக தொடர்ச்சியாக குந்தியிருப்பதை புதுடில்லி விரும்பவில்லை. அத்தோடு அதன் பின்பும் தொழில் நுட்ப ஆலோசனைக் குழு என்ற பெயரில் சில சீனர்கள் இங்கு நிலைகொள்ளக்கூடும் என இந்தியா கருதியது.

இதனையடுத்து அப்போது யாழில் இருந்த இந்தியத் துணைத் தூதரகத்தின் தூதுவரான பாலச்சந்திரன் தலைமையிலான குழுவொன்று தீவுப்பகுதிக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தது.

இறுதியில் இலங்கை அரசுடன் இது தொடர்பில் நேரடியாகவே பேச்சில் ஈடுபட்டது இந்தியா.

இந்தத் திட்டம் எக் காரணம் கொண்டும் சீனாவிடம் வழங்கப்படுவதை இந்தியா விரும்பவில்லை என இந்தியா அப்போது தெரிவித்தது. சீனா ஆரம்பிக்கவிருந்த திட்டம் தடுத்து நிறுத்தப்பட்டது.

அவ்வாறு நிறுத்துவதானால் என்ன காரணத்தை முன் வைப்பது என்ற கேள்வியும் எழுந்தது.

தற்போது இதற்கான பணத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி கடனாக வழங்க, சீனா அதன அமைக்கும் பணியை மேற்கொள்ளவே திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கான செலவுப் பணம் அனைத்தையும் இந்தியாவே நன்கொடையாக வழங்கத் தயாராகவுள்ளது, அதனால் சீனா அதனை மேற்கொள்வதைத் தடுத்து நிறுத்தும்மாறு கோரப்பட்டது. இதனையடுத்து வேறு வழியின்றி இலங்கை அரசும் ஒப்புக்கொண்டு சீனாவை இத்திட்டத்திலிருந்து வெளியேற்றியது.

இவ்வாறு பெரும் இழுபறிகள், அரசியல் சர்ச்சைகளை ஏற்படுத்திய திட்டம் தற்போது மீண்டும் முன்னெடுக்கப் படவுள்ளது. "நாரதர் கலகம் நன்மையில் முடியும்" என்பதுபோல் இத் திட்டத்தின் சர்ச்சையினாக் எழுந்த நன்மை எனில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியில் முன்னெடுக்க திட்டமிடப்பட்ட மின் உற்பத்தி நிலையத்தை இந்தியாவே தடுத்தமையினால் இந்திய அரசு தனது நிதியில் இலவசமாக அதனை அமைத்து வழங்கவுள்ளது.

மின் உற்பத்தி நிலையத்தில் நெடுந்தீவில் நெறுவிலிப் பகுதியில் உள்ள திருலிங்கபுரத்தில் 12 ஏக்கரில் திட்டத்திற்கான அறிவித்தல் பலகை நடப்பட்டுள்ளது. ஏனைய இரு தீவுகளிலும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் இடங்கள் முழுமையாகத் தயார் செய்யப்பட்டுவிட்டன.

இந்த மூன்று திட்டத்திலும் சீனாவின் தலையீட்டைக் கண்டித்து 2021-02-14 அன்று யாழில்கூடிய 10 தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டத்தில் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்குதல்!



இந்திய கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நான்கு இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆர்காட்டுத்துறையில் இருந்து தென்கிழக்கில் 22 கடல் மைல் தொலைவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களை இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்குத்தல் நடத்தியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் 5 இலட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் சேதமடைந்துள்ளன.

இலங்கை கொள்ளையர்கள் தங்கைளைத்தாக்கி, வலைகளை எடுத்துச் சென்றுள்ளனர் என தமிழக மீனவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

## உத்தராகண்ட் மண்சரிவில் சிக்கி கைக்குழந்தை உட்பட 4 பேர் பலி!




உத்தராகண்டில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 4 மாதக் குழந்தை, 2 பெண்கள் உள்பட 4 பேர் உயிரிழந்துள்ளனர். தெஹ்ரி மாவட்டம் சம்பாவில் இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், தெஹ்ரி – சம்பா இடையேயான வீதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக வீதி போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. மாநில பேரிடர் மேலாண்மைக் குழுவினர் இயந்திரங்களைக் கொண்டு பாதையை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

உத்தராகண்டில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இன்றும், நாளையும் உத்தராகண்டுக்கு செம்மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக டேராடூன், பாரீ, நைனிடால், சம்பாவத், பாகேஸ்வர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் இன்று மிககனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இமாச்சல பிரதேச மாநில தலைநகர் சிம்லாவில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக சம்மர்ஹில் பகுதியில் அமைந்திருந்த சிவன் கோயில் இடிந்து விழுந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் உடல் நசுங்கி இறந்தனர்.

இதைத் தொடர்ந்து அப்பகுதியில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை அங்கிருந்து 17 பேரின் உடல்களை மீட்புப் படையினர் மீட்டுள்ளனர். இதுகுறித்து இமாச்சல பிரதேச மாநிலத் தலைமைச் செயலாளர் பிரபோகத் சக்சேனா கூறும்போது, இதுவரை 17 பேரின் உடல்களை மீட்டுள்ளோம். இன்னும் 2 பேரின் உடல்கள் உள்ளேயே சிக்கியுள்ளன. அவற்றை மீடக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மேலும் சிலரின் உடல்கள் உள்ளேயே சிக்கியிருக்கலாம் என சந்தேகிக்கிறோம். அடுத்த 2 அல்லது 3 நாட்களில் அந்த உடல்களையும் மீட்டுவிடுவோம் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இமாச்சலப் பிரதேசத்தின் நிவாரண பணிகளுக்கு 10 கோடி ரூபா நிதி உதவி வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

## 87 போலி வலைதளங்கள் முடக்கம்!

தமிழகத்தில் கோயில்கள் பெயரில் செயல்பட்டு வந்த 87 போலி வலைதளங்கள் முடக்கப்பட்டுள்ளன என உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இராமநாதபுரத்தை சேர்ந்த சுப்பிரமணியன் மற்றும் மார்கண்டன் ஆகியோர் உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனுவில், தமிழகத்தில் முக்கிய கோயில்கள், மடங்களுக்கு வெளி மாநிலம், வெளி நாடுகளில் இருந்தும் பக்தர்கள் வந்து செல்கின்றனர். கோயிலுக்கு நேரில் வர முடியாதவர்கள் கோயில் பெயர்களில் செயல்படும் இணையதளம் வழியாக நன்கொடை செலுத்துகின்றனர்.

இந்த நிலையில், முக்கிய கோயில் பெயர்களில் தனி நபர்கள் இணையதளங்கள் தொடங்கி தவறான தகவல்களை அளித்து நிதி பெற்று மோசடி செய்து வருகின்றனர். இந்த மோசடியை தடுக்க கோயில்கள் பெயர்களில் தனிநபர்கள் இணையதளம் தொடங்க தடை விதித்தும், அதுபோன்ற இணையதளங்களை முடக்கவும் உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுக்கள் நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், டி.பரதசக்கரவர்த்தி அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு தரப்பில், கோயில்களின் பெயரில் போலியாக செயல் பட்ட 87 போலி வலைதளங்கள் முடக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் என்ற செயலி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அதில், 48 கோயில்கள் விபரங்கள் உள்ளன என தெரிவிக்கப்பட்டது. இதை பதிவு செய்து கொண்டு விசாரணையை நீதிபதிகள் ஒத்திவைத்துள்ளார்.

# உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ரஷ்யாவின் போர் விமானம் தீக்கிரை!





உக்ரைன் ட்ரோன் தாக்குதலால் ரஷ்யாவின் சக்தி வாய்ந்த போர் விமானமொன்று தீக்கிரையாகியுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கின் தெற்கே உள்ள இராணுவ விமான தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த போர் விமானமே இவ்வாறு தீக்கிரையானதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த போர் விமானமானது ஒலியை விட இரண்டு மடங்கு வேகத்தில் பயணிக்கக்கூடியது மற்றும் உக்ரைனில் உள்ள நகரங்களை தாக்க ரஷ்யாவால் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ரஷ்ய நேரப்படி சனிக்கிழமை பகல் 10 மணியளவில் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமான விபத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான இராணுவ விமான தளமானது உக்ரைன் எல்லையில் இருந்து சுமார் 400 மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது.

மேலும், தாக்குதலுக்கு உள்ளான போர் விமானமானது சிரியா, செச்சினியா, ஜார்ஜியா மற்றும் மிக சமீபத்தில் உக்ரைனுக்கு எதிராகவும் ரஷ்யாவினால் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானிய அருங்காட்சியகத்தில் கலைப்பொருட்கள் திருட்டு!



உலகப் புகழ்பெற்ற பிரித்தானிய அருங்காட்சியகத்தில் இருந்து பழங்கால கலைப்பொருட்கள் திருடப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானிய அருங்காட்சியகத்தில் பழங்கால நகைகள், வைரக்கற்கள், கண்ணாடிகள் போன்ற பல்வேறு பொருட்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவ்வப்போது இங்கு கண்காட்சிகள் நடத்தப்படுவது உண்டு. ஆனால், சமீப காலமாக அங்கு கண்காட்சிகள் எதுவும் நடத்தப்படவில்லை.

இந்த நிலையில், தற்போது அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்ட ஆய்வில், விலைமதிப்பற்ற பொருட்கள் பல திருடப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

ரோமானிய பொருட்கள் உட்பட சுமார் 2000 பொருட்கள் மாயமாகி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

திருடப்பட்ட பொருட்களில் சில இணையத்தளத்தில் அவற்றின் மதிப்பை விட மிகக் குறைந்த விலையில் விற்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விசாரணையில் அருங்காட்சியகத்தின் மூத்த கண்காணிப்பாளர் பீட்டர் ஹிக்ஸ் என்பவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேலும், திருடப்பட்ட பொருட்களை மீட்டெடுக்கத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அருங்காட்சியக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கிரீஸ் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார் ஜெலென்ஸ்கி!



ரஷ்ய ஆக்கிரமிப்பிலிருந்து தப்பிய உக்ரைனியர்களுக்கு உதவிய கிரீஸ் நாட்டின் ஜனாதிபதிக்கு ஜெலென்ஸ்கி நன்றி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் ஈடுபட்டு வரும் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, பல நாடுகளுக்கு சென்று ஆதரவும், உதவியும் கோரி வருகின்றார்.

அந்த வகையில் அவர் கிரீஸ் நாட்டின் ஜனாதிபதி காத்தரீனா சாகெள்ளரோ போலூவை சந்தித்து பேசியுள்ளார்.

ரஷ்ய ஆக்கிரமிப்பில் இருந்து தப்பிய உக்ரைனியர்களுக்கு உதவியதற்காகவும், பாதிக்கப்பட்ட உக்ரைனிய குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்ததற்காகவும் கிரீஸுக்கு நன்றி தெரிவிக்க, கிரீஸின் ஜனாதிபதி காத்தரீனா சாகெள்ளரோபோலூவை சந்தித்தேன் என்றும் தெரிவித்துள்ளார்.



# கடத்தப்பட்ட தேக்கம் குற்றிகளை மடக்கிப் பிடித்தனர் பொலிஸார்!

(த.சுபேசன்)

ஒல்லித் தேங்காய் குவியலுக்குள் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட 13 தேக்க மரக்குற்றிகளை கடந்த வெள்ளிக் கிழமை பிற்பகல் சாவகச்சேரிப் பொலி ஸார் மீட்டதுடன் சந்தேக நபர் ஒரு வரையும் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவில் இருந்து யாழ்ப் பாணம் நோக்கி ஒல்லித் தேங்காய் குவியலுக்குள் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட தேக்க மரக் குற்றிகளே சாவகச்சேரி நகரப் பகுதியில் விசேட கடமையில் நின்றிருந்த பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாரின் சோதனை நடவடிக் கையின் போது மரக் கடத்தலில் ஈடுபட்ட நபர் தப்பித்துச் சென்றிருந்த நிலை யில் பொலிஸார் அவரை கைது செய் துள்ளனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த 33 வய தான சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மூன்று லட்சம் ரூபாய் பெறுமதி யான தேக்க மரங்களே இவ்வாறு சூட்சுமமான முறையில் கடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற் கான நடவடிக்கைகளையும் மேற் கொண்டு வருகின்றனர்.

# ஊடகவியலாளர் கௌரவிப்பும் நிர்வாகத் தெரிவும்




( ஏ.எல்.எம்.ஷினாஸ், அ.அஸ்வர்)

அம்பாறை மாவட்ட ஊடகவிய லாளர் போரத்தின் ஆறாவது மாநாடும் ஊடகவியலாளர் கௌரவிப்பும் புதிய நிர்வாகத் தெரிவும் போரத்தின் தலை வர் கலாபூசணம் எம்.ஏ.பகுர்டீன் தலை மையில் அக்கரைப்பற்று எய்ம்ஸ் சர்வ தேச பாடசாலை கேட்போர் கூடத்தில் (20) நடைபெற்றன.

இந்த நிகழ்வில் இலங்கை இராணு வத்தின் 24 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்ரசிறி பிரதம அதிதியாகவும், தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர். கலாநி-தி றமீஸ் அப்துல்லா, தினகரன் பத்திரி கையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கே.குணராசா ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது ஊடகத்துறையில் நீண்டகாலமாகப் பணியாற்றிவரும் பிரதேச ஊடகவியலாளர்கள் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டனர்.

நிகழ்வின் இறுதியில் நடப்பாண்டுக் கான புதிய நிர்வாக சபை தெரிவு தற் காலிக தலைவர் சிரேஷ்ட ஊடகவியலா ளர் எம்.ஐ.எம்.அஸ்ஹர் முன்னிலையில் இடம்பெற்றது.

இதில் போரத்தின் புதிய தலைவர் –எம்.எஸ்.எம்.ஹனீபா, செயலாளர் – ஏ.எல்.எம்.ஷினாஸ், பொருளாளர் – எம்.எப்.எம்.நவாஸ், தவிசாளர் – கலா-பூசணம்.எம்.ஏ.பகுர்டீன், பிரதித் தலை வர் –ஏ.எல்.ஏ.நிப்றாஸ், அமைப்பாளர் – யூ.எல்.எம்.றியாஸ், கணக்காய்வா-ளர் எம்.எஸ்.எம்.ஏ.மலீக், உப தலை-வர் – எம்.சஹாப்தீன், உப செயலாளர் – வீ.சுகிர்தகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பிரதேச ரீதியாக பின்வருவோர் நிருவாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஏ.எச்.றஸ்மி (இறக் காமம்), என்.எம்.எம்.புஆத் (சம்மாந் துறை), எம்.எஸ்.எம்.நிஸ்வான் (அக்கரைப் பற்று), ஐ.ஏ.சிறாஜ் (பாலமுனை), கே.எல். அமீர் (ஒலுவில்), ஏ.அஸ்வர் (மாளிகைக் காடு), யூ.கே.காலிதீன் (சாய்ந்தமருது), ஏ.பி.எம்.அஸ்ஹர் (கல்முனை), எம்.ஆர். எம்.முஸ்தபா (மத்திய முகாம்).



# மாகாண மற்றும் தேசிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவருக்குப் பதக்கம்

(அஸ்ஹர் இப்றாஹிம் )

இவ்வருடம் இடம்பெற்ற தேசிய ஒலிம் பியாட் போட்டி, மத்திய மாகாண 17 மற்றும் 20 வயதுக்குட்பட்ட கரம் சுற்றுப் போட்டி, 20 வயதுக்குட்பட்ட கூடைப்பந் தாட்டம், குத்துச் சண்டை, குருணாகல – கண்டி மாவட்ட கூடைப்பந்தாட்டம் ஆகிய வற்றில் அக்குரண அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையிலிருந்து பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக் கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எப். எம்.சிராஜ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், உடற் கல்வித்துறை ஆசிரியர்கள், ஆசிரி யர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# நினைவகலா நினைவுகள்



பிறப்பு 21 * 10 * 1937

இறப்பு 23 * 08 * 2012

**இந்திரராசா செங்காரபிள்ளை**
(சங்கர்)



பிறப்பு 11 * 02 * 1936

இறப்பு 29 * 08 * 2009

**செங்காரபிள்ளை பூரணபாக்கியம்**

நேற்று வரை எம்முடன் வாழ்ந்தீர்கள் என்றே
உள்ளத்து உணர்வலைகள்
ஆசையுடன் அசைபோடுகின்றன - என்றாலும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை இறைஞ்சி அஞ்சலிக்கின்றோம்.

505, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# உணவு உற்பத்தியை அதிகரிக்கும் திட்டத்தில் பயனாளிகளுக்குப் பயறு

(நவாஸ் )

அரசின் 2023 ஆம் ஆண்டில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தின் மற்றுமொரு அங்கமாக நடுகைக்கான பாசிப்பயறு வழங்கப்பட்டு வருகிறது.

18ஆம் திகதி அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் எல்லைக்குட்பட்ட ஆலிம் நகர் கிராம சேவகர் பிரிவில் நுரைச்சோலையில் பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



இதில் உதவி பிரதேச செயலாளர் வை. ராசித் மற்றும் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் யு.எல் ஆகிர், விவசாய போதனாசிரியர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் 9 பயனாளிகளுக்கு தலா 5 கிலோ வீதம் பாசிப் பயறு வழங்கப்பட்டது.



# அறிவார்ந்த எதிர்காலத்தை நோக்கி மாணவர் ஆராய்ச்சி செயற்றிட்டம்

(நூருல் ஹுதா உமர், அ.அஸ்வர் )

அறிவார்ந்த எதிர்காலமொன்றுக்கு பாடசாலை சிறார்களை முன்னிலைப் படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கிளையின் ஊடாக வருடாந்தம் நடைமுறைப் படுத்தப்படும் "பாடசாலை ஆராய்ச்சி வாரம்" செயற்றிட்டத்தின் 2023 ஆம் ஆண்டுக்குரிய செயற்பாடுகள் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்லூரியின் அதிபர் யூ.எல்.எம். அமீன், விஷேட அதிதியாக மஹ்மூத் மகளிர் கல்லூரி பழைய மாணவியும் சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.சி. நஸ்லீன் றிப்கா அன்சார் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# 'புராதன இலங்கை' கண்காட்சி






(அ.அஸ்வர் )

அம்பாறை மாவட்டம் மாவடிப்பள்ளி அஷ்ரப் மகா வித்தியாலயத்தின் 6,7,8 ஆம் தர மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட "புராதன இலங்கை" எனும் தலைப்பிலான கண்காட்சி பாடசாலை ஆராதனை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் வி.எம்.லம் ஸம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கண்காட்சிக்கு பிரதம அதிதியாக வரலாறு மற்றும் தகவல் தொழில் நுட்ப பாட ஆசிரிய ஆலோசகர் பி.ரி.எம்.மஹ்ரூபும், சிறப்பு அதிதியாக காரைதீவு கோட்டக் கல்வி அதிகாரி ரீ.டேவிட்டும் கலந்து கொண்டனர்.

வரலாற்று பாட ஆசிரியர்களான எஸ்.எம்.பாத்திமா சிபாயா, எம்.எம். பாத்திமா சிபாறா, ஜே.எம்.றிஸ்வான், எம்.எம்.சமீம் ஆகியோரின் நெறிப்படுத்தலில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கண்காட்சியைப் பாடசாலையின் பிரதி அதிபர்களான ஏ.எல்.றஜாப்தீன், எம்.சி.எம்.தஸ்தகீர், உதவி அதிபர் எஸ்.எம்.அஹமட்லெவ்வை உட்பட பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலரும் பார்வையிட்டதுடன் மாணவர்களின் முயற்சிகளுக்கு பாராட்டும் தெரிவித்தனர்.







# மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கு உதவிகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மண்டோஸ் புயலால் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்டு உரிய நிவாரணங்கள் கிடைக்க பெறாமல் வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் காணப்பட்ட 40 மீனவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவி வழங்கும் நிகழ்வு நேற்று (21) மன்னார் மாவட்ட செயலக ஜேக்கா மண்டபத்தில் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் இடம் பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் நிவாரணப் பணியின் ஒரு பகுதியாக மன்னார் மாவட்டத்தில் முதல் கட்டமாக 40 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒரு குடும்பத்துக்குத் தலா 45 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் உள்ளடங்களான மீன் பிடி உற்பத்தி பொருள்கள் கையளிக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட 40 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டதில் 40 குடும்பங்களுக்கும் முல்லைத்தீவு 40 குடும்பங்களுக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த 52 குடும்பங்களுக்கும் குறித்த நிவாரண பொருள்கள் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் கடந்த மாதம் மெசிடோ நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட பெண் முயற்சியாளர்களுக்கான சவர்கார உற்பத்தி பயிற்ச்சியை பூர்த்தி செய்த பெண்களுக்கான சான்றிதல் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் ஸ்ரான்லி டிமேல், மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கலிஸ்ரன், கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் லெம்பேர்ட் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமை பிரிவில் உதவி பணிப்பாளர் திலீபன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# இன்றைய ராசி பலன்கள் - 23.08.2023




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சிறந்த பலன்கள் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்களிடத்தில் காணப்படும் அசாதாரணமான திறமை காரணமாக பணியிடத்தில் சிறப்பான வளர்ச்சி காணப்படுகின்றது. இதன் மூலம் உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் ஒட்டுதலை வளர்த்துக் கொண்டு ஒட்டி உறவாடுவதன் மூலம் நல்லுறவை பராமரிக்கலாம். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். உங்கள் கையிலுள்ள பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாக காணப்படும். முடிவுகள் எடுப்பதில் திடமாக இருப்பீர்கள்.

பதவி உயர்வு வகையில் பாராட்டு கிடைக்கும். உங்கள் திறமை மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொண்டு இருவரும் மகிழ்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று உங்களின் தரமான நேரத்தை கழிப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் கூடுதல் பண வரவு கிடைக்க வாய்ப்புள்ளது.

நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உடல் ஊனமுற்றோர் அல்லது நோயாளிகளுக்கு தொண்டு செய்வதன் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதம் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சவாலான சூழல்களை நீங்கள் சமாளிக்க வேண்டும்.

குடும்ப பிரச்சினை பற்றி உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இதனால் உறவில் முரண்பாடு ஏற்படும்.

பணம் அதிக அளவில் காணப்படாது. மருத்துவ செலவுகள் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

இன்று தோல் எரிச்சல்கள் காணப்படலாம். எண்ணெய் மற்றும் கார உணவுகளை தவிர்க்கவும்.




இன்று சில சௌகரியங்களை இழக்க நேரலாம். இன்று கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் தந்தையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். ஆன்மீக ஈடுபாடு அமைதியை அளிக்கும்.

உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும். நீங்கள் சிறந்த பலன் பெற இன்று கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிகரமாக நடந்துகொள்வீர்கள். இந்தப் போக்கு உறவின் புரிந்துணர்வை பாதிக்கும்.

உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பணம் கிடைக்கும். என்றாலும் சேமிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும்.

அதிக வேலை காரணமாக பதட்டமும் மூட்டுகளில் வலியும் ஏற்படலாம்.




உங்களின் சிறந்த தகவல் பரிமாற்ற திறன் மூலம் நீங்கள் சாதிப்பீர்கள். இன்று நம்பிக்கையான மனநிலையும் உறுதியும் உங்களிடம் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் சிறந்த பணிக்கு நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் தனித்த திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை கிடக்கும். இது உங்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக நீங்கள் இன்று திடமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்றைய சவால்களை எதிர் கொள்ள நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியாக இருக்க இசை மற்றும் பொழுதுபோக்கு விஷயங்களில் ஈடுபடுங்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் சில போராட்டங்களை எதிர்கொள்வீர்கள். அதிகப் பணிகள் காணப்படும். தவறுகள் நேராமல் இருக்க பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் திருப்திகரமான உறவுநிலை காணப்படாது. வேறுபாட்டைகளைய இருவரும் மனம் திறந்து பேசுவது நல்லது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று சவால்கள் நிறைந்திருக்கும். உங்கள் வளர்ச்சியில் தடைகளை சந்திப்பீர்கள். உங்கள் இலக்குகள் நோக்கி செயல்பட வேண்டும். பெரிய அளவில் சிந்தனையை ஏற்படுத்திக் கொண்டு விரும்பிய பலன்களை அடைய வேண்டும்.

பணியில் சிறிது மந்தநிலை காணப்படும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் தைரியம் இழந்து காணப்படுவீர்கள். நம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுங்கள்.

உங்கள் பேச்சில் கட்டுப்பாட்டை இழக்க வாய்ப்புள்ளது. எனவே உங்கள் துணையுடனான அணுகு முறையில் பொறுமை தேவை. நட்புடன் பழக முயலவும்.

பூர்வீக சொத்து மூலமாக பண வரவு ஏற்படும். என்றாலும் உங்கள் சேமிப்பு நிலை உயர்வது கடினம்.




உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். இன்று வெற்றி பெறுவதற்கு திட்டமிட வேண்டும். பதட்டப்படாமல் கட்டுப்பாட்டுடன் உங்கள் செயல்களை செய்ய வேண்டும்.

உங்கள் கடினமான பணிகளைகூட எளிதாக முடிப்பீர்கள். விரும்பி பணியாற்ற முயல்வதன் மூலம் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். வெளியிடங்களுக்கு அழைத்துச் சென்று சமாதனப் படுத்துங்கள். இதனால் இருவருக்குமிடையிலான உறவு மேம்படும்.

வங்கியில் போதுமான பண இருப்பு பராமரிக்க இயலாது. தவிர்க்க முடியாத செலவுகள் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.08.2023




இன்று நீங்கள் உயர்ந்த நிலையை அடைவீர்கள். உங்கள் திறமைகளை வெளிபடுத்த நம்பிக்கையான வாய்ப்புகள் கிடைக்கும். நீங்கள் உறுதியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாகப் பழக வேண்டும். இதன் மூலம் இருவரின் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலை மகிழ்ச்சிகரமாகவும் பாதுகாப்பாகவும் காணப்படும். உங்கள் பாதுகாப்பிற்கு தேவையான பணம் கிடைக்கும்.

உங்களிடம் மிகுந்த ஆற்றல் காணப்படும். இதன் காரணமாக சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் மும்மரமாக செயல்படும் சூழ்நிலை காணப்படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் நற்பெயர் எடுக்க வாய்ப்புள்ளது. கடினமான பணிகளையும் இன்று எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். இதன் மூலம் இருவரிடையே நல்லுறவும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பணம் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நிறைந்த ஆற்றலும் சிறந்த ஆரோக்கியமும் காணப்படும். நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் சாதகமான பலன்களை அளிக்காது. இன்று வளர்ச்சி காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் வகையில் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். பதட்டத்தை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணியில் வளர்ச்சி காண கூடுதல் முயற்சி தேவை.

உங்கள் துணையிடம் சிறிய விஷயங்களையும் பெரிதாக எடுத்துக் கொள்ள முனைவீர்கள். இதனால் இருவரிடையிலான உறவில் மகிழ்ச்சி குறையும்.

நிதி வளர்ச்சி மகிழ்சிகரமாக இருக்காது.வரவுக்கும் செலவுக்குமான சமநிலையை பராமரிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்றைய கடினமான சூழ்நிலைகளை அமைதியாக சமநிலை உணர்வுடன் சமாளித்தால் சிறந்த பலன் கிடைக்கும். இன்று அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் கீழ் பணிபுரிபவர்களிடம் மோதல்கள் காணப்படும். சுமூகமாக பணியாற்ற உங்கள் பதட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிருங்கள்.இதன் மூலம் உறவில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தில் ஸ்திரத்தன்மை பாதுகாக்க சிக்கனப்படுத்தி பணத்தை சேமிக்க வேண்டும்.

ஆரோக்கியமாய் இருக்க ஆரோக்கிய உணவை உண்ண வேண்டும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES
40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPAR JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park